பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 03 2025 **MONDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, சிறுத்தை, புலி மற்றும் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மட்டுமின்றி, ஊரகப்பகுதி மேம்பாட்டிலும் பால்வளத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. தரமான கல்வியை உறுதி செய்யும் நோக்கில், தேசிய கல்விக்கொள்கை கொண்டுவரப்பட்டுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

5. உலக ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரணாவ் வெங்கடேஷ் முதலிடத்தில் உள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

சிறுத்தை, புலி மற்றும் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளில் வெகுவாக அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சர்வதேச வனஉயிரின தினத்தையொட்டி, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வனவிலங்குகளை பாதுகாப்பதற்காக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய வன உயிரின வாரியத்தின் கூட்டமும் பிரதமர் தலைமையில் குஜராத் மாநிலம் **Sasan Gir**-ல் நடைபெற்றது.

வன உயிரி மேலாண்மையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்கும், மனித - விலங்கு மோதலை கட்டுப்படுத்துவதற்கும் இது உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

டால்பின் பாதுகாப்பு குறித்து கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

**<<<<<>>>>>**

பாதுகாப்புப்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலனுக்காக நாட்டு மக்கள் அனைவரும் தாராளமாக நன்கொடை வழங்க வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற கொடிநாள் சமூக பொறுப்பு நிதி மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

பாதுகாப்புப்படை வீரர்களின் நலனை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மட்டுமின்றி, ஊரகப்பகுதி மேம்பாட்டிலும் பால்வளத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சிறு விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிலும் இந்த துறை முக்கிய பங்கு வகிக்கிறது என்று குறிப்பிட்டார்.

மகளிர் மேம்பாட்டிற்கும் இந்த துறை உறுதுணையாக உள்ளது என்று அவர் கூறினார்.

பால்வளத்துறையில் மகளிர் பங்களிப்பு 62 சதவீதமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய பால்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங், கடந்த பத்தாண்டுகளில் பால் உற்பத்தி 63 சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறினார்.

<<<<<>>>>>

பெண்களுக்கு எதிரான இணைய குற்றங்களை தடுப்பதற்காக உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இணைய குற்றங்களை தடுப்பதற்கான சட்டங்கள் குறித்த கருத்தரங்கில் பங்கேற்று அவர் பேசினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் காரணமாகவும் இணைய குற்றங்கள் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டர்.

இதனை தடுப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் மக்கள் நலத்திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக மாநில அமைச்சர் திரு ஐ பெரியசாமி கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் அழகர் நாயக்கன்பட்டியில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான பணிகளை தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநில அரசின் இதயம் காப்போம் திட்டத்தின்கீழ், ஏராளமானோர் பயனடைந்து வருவதாகவும் திரு பெரியசாமி கூறினார்.

<<<<<>>>>>

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்ட மனைகளுக்கு கிரையப்பத்திரம் வழங்குவது குறித்து ஆய்வு செய்வதற்கென 50 பேர் நியமிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, இந்த வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் திரு அன்சுல் மிஸ்ரா தலைமையில் இன்று சென்னையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இதுவரை கிரையப்பத்திரங்கள் பெறாமல் உள்ள 12 ஆயிரத்து 495 மனைகளில் இதற்கென நியமிக்கப்பட்ட சமுதாய பங்கேற்பு உதவியாளர்கள் ஆய்வு செய்யுமாறு இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

இதுதொடர்பான விவரங்களை பத்து தினங்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

தரமான கல்வியை உறுதி செய்யும் நோக்கில், தேசிய கல்விக்கொள்கை கொண்டுவரப்பட்டுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் விடுத்துள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த கல்விக்கொள்கை ஒருதலைபட்சமானது என்று கூறப்படுவதை நிராகரித்தார்.

அரசு பள்ளி மாணவர்கள் மூன்றாவது மொழியை கற்கும் வாய்ப்பை வழங்க முதலமைச்சர் மறுப்பது ஏன் என்றும் அவர் வினவியுள்ளார்.

தனியார் பள்ளி மாணவர்கள் மூன்றாவது மொழியை கற்கும்போது, அந்த வாய்ப்பு அரசுப்பள்ளி மாணவர்களுக்கு மறுக்கப்படுவதாகவும் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

அரசு மருத்துவமனைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்கள், செவிலியர்களை நியமிப்பது சமூக நீதிக்கு எதிரானது என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை கொளத்தூரில் தமிழக அரசால் புதிதாக திறக்கப்பட்டுள்ள அரசு மருத்துவமனையில், புதிதாக எந்த மருத்துவரும் நியமிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதில்லை என்ற கொள்கை முடிவினை தமிழக அரசு எடுக்க வேண்டும் என்றும் திரு அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தென்தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அடுத்த சில தினங்களில் கோடை வெயிலின் தாக்கம் படிப்படியாக அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கும் மூன்றாவது நாளாக இன்றும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - செந்தில் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பூர் மாவட்டத்தில் இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம் வேண்டி, மனு கொடுத்த மாற்றுத்திறனாளிகளுக்கு அவற்றை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவள்ளி கூறியுள்ளார்.

-----------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் வனத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியினை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று பார்வையிட்டார்.

---------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் வடக்கனந்தல் பேரூராட்சியில் 24 லட்சம் ரூபாய் மதிப்பிலான சிறுவர் பூங்காவினை ஆட்சியர் திரு பிரசாந்த் இன்று திறந்துவைத்தார்.

----------------

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி உமா அதிகாரிகளுக்கு அறவுறுத்தியுள்ளார்.

---------------

அரியலூர் மாவட்டம் திருமழப்பாடியில் உள்ள வைத்தியநாத சுவாமி கோவிலில் மாசி மக பெருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரணவ் வெங்கடேஷ் முதலிடத்தில் உள்ளார்.

**Montenegro** –வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆறாவது சுற்றில் அவர், அர்மீனியாவின் **Emin Ohanyan**-ஐ வென்றார்.

---------------------

மெக்சிகோவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Krishna Jayasankar** வெண்கலப்பதக்கம் வென்றார்.

மகளிர் குண்டுஎறிதலில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------------

**Prague** செஸ் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா மற்றும் அரவிந்த் சிதம்பரம் முதலிடத்தில் உள்ளனர்.

இதுவரை, இருவரும் தலா மூன்றரை புள்ளிகளை பெற்றுள்ளனர்.

------------------

**Gurugram** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Yashaswini Panwar** மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் வெற்றிபெற்றார்.

இதேபோல், **Ahlawat Shruti** –யும் இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் 7-6, 6-2, என்ற செட் கணக்கில், தாய்லாந்தின் **Thamchaitwat Bunyawi** –ஐ வென்றார்.

----------------

தேசிய படகு சாம்பியன் போட்டி போபாலில் இன்று தொடங்கியது.

----------------

கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப்போட்டிகள் ஜம்மு காஷ்மீரில் வரும் 9-ஆம் தேதி தொடங்கி, 12-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டிக்கான கொல்கத்தா அணியின் கேப்டனாக ரஹானே நியமிக்கப்பட்டுள்ளார்.

----------

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தென்மண்டல மகளிர் வாலிபால் போட்டி நாமக்கல் மாவட்டம் பாய்ச்சலில் இன்று தொடங்கியது.

<<<<<END>>>>>